**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 24-ம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆடி திங்கள் 08-ம் நாள்**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 242/2023**

*(CNR No. TNSV07-001338-2022)*

(குற்ற எண்.44/2015, தேவகோட்டை தாலுகா காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் சார்பு ஆய்வாளர்,
தேவகோட்டை தாலுகா காவல்நிலையம்,
குற்ற எண்.44/2015. ….குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.சாமித்துரை (2 வது எதிரி) (73/2026)
த/பெ. சுப்பையா

2. பாலுச்சாமி (3 வது எதிரி) (70/2026)
த/பெ. சுப்பையா

3. செல்வக்குமார் (4 வது எதிரி) (45/2026)
த/பெ. பாலுச்சாமி

4. கருணாநிதி (5 வது எதிரி) (44/2026)
த/பெ. பாலுச்சாமி

5. செல்லக்கண்ணு (6 வது எதிரி) (60/2026)
த/பெ. பொக்கையன்

6. பிச்சை (7 வது எதிரி) (56/2026)
த/பெ. பம்பையன்

7. செல்லமுத்து (8 வது எதிரி) (61/2026)
த/பெ. பழனி

.....எதிரிகள்

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி வழக்கின் சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் சார்பு ஆய்வாளர்,<br>தேவகோட்டை தாலுகா காவல்நிலையம்,<br>குற்ற எண்.44/2015. |
| 2. | எதிரிகள் | 1.சாமித்துரை (2 வது எதிரி) (73/2026)<br>த/பெ. சுப்பையா<br><br>2. பாலுச்சாமி (3 வது எதிரி) (70/2026)<br>த/பெ. சுப்பையா<br><br>3. செல்வக்குமார் (4 வது எதிரி) (45/2026)<br>த/பெ. பாலுச்சாமி<br><br>4. கருணாநிதி (5 வது எதிரி) (44/2026)<br>த/பெ. பாலுச்சாமி<br><br>5. செல்லக்கண்ணு (6 வது எதிரி) (60/2026)<br>த/பெ. பொக்கையன் |

| | | | |
|---|---|---|---|
| | | 6. பிச்சை (7 வது எதிரி) (56/2026)<br>த/பெ. பம்பையன்<br><br>7. செல்லமுத்து (8 வது எதிரி) (61/2026)<br>த/பெ. பழனி<br>**<u>எதிரிகளின் முகவரி:</u>**<br>பிராந்தனி, புளியால் அஞ்சல், தேவகோட்டை தாலுகா, சிவகங்கை மாவட்டம். | |
| 3. | குற்றச்சாட்டுகள் | 2 முதல் 8 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 448, 379-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.<br>(இவ்வழக்கின் 1 வது எதிரி கடந்த 04/12/2021 அன்று இறந்து விட்டதால் அவரைப் பொறுத்து மட்டும் வழக்கு 28/07/2025 ம் தேதியன்று அற்றுப்போய்விட்டதாக உத்தரவிடப்பட்டுள்ளது.) | |
| 4. | சம்பவம் நடந்த நாள் | 24/01/2015 | |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 17/08/2023 | |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | இல்லை | முன்பிணை பெற்ற நாள்: 22/04/2015 |
| | பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | இல்லை | |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 17/08/2023 | |

<table>
<tr><td>8.</td><td>கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="3">08/07/2026</td></tr>
<tr><td>9.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">-----</td></tr>
<tr><td rowspan="3">10.</td><td rowspan="3">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>10/07/2026</td><td>15/07/2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>15/07/2026</td><td>15/07/2026</td></tr>
<tr><td>11.</td><td>எதிரிகளிடம் குற்றம் குறித்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 351(1)(b)ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="3">20/07/2026</td></tr>
<tr><td rowspan="2">12.</td><td rowspan="2">எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td>பிடியாணை வழங்கப்பட்ட நாள்</td><td colspan="2">பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</td></tr>
<tr><td>------</td><td colspan="2">-----</td></tr>
<tr><td>13.</td><td>வழக்கு விசாரணை தொடங்கிய நாள்</td><td colspan="3">08/07/2026</td></tr>
<tr><td>14.</td><td>வழக்கு விசாரணை முடிந்த நாள்</td><td colspan="3">20/07/2026</td></tr>
<tr><td>15.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">24/07/2026</td></tr>
<tr><td>16.</td><td>தீர்வு</td><td colspan="3">முடிவாக, 2 முதல் 8 வரையிலான எதிரிகள் இதச பிரிவுகள் 147, 448, 379-ன் கீழ் குற்றவாளிகள் அல்ல</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | **என்று தீர்மானித்து எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. 1 ம் எதிரியை பொறுத்து வழக்கு அற்றுப்போனதாக 28/07/2025 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.** |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. அசோகன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

கடந்த கடந்த 24.01.2015-ம் தேதியன்று இரவு சுமார் 08.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரிகள் ஒன்று சேர்ந்து வாதியின் வயலுக்குள் அத்துமீறி உள்ள நுழைந்து இரண்டு கதிர் அறுக்கும் இயந்திரங்களை கொண்டு வாதியின் 7 1/2 நிலங்களில் விளைந்து அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த சுமார் 200 மூடைகள்

அளவிளான ரூ.1,40,000 மதிப்பு உள்ள நெல்லை திருடி சென்ற குற்றத்திற்காக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 448, 379-ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 இன் படி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் 2 முதல் 8 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 448, 379-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவிய போது எதிரிகள் குற்றங்களை மறுத்துரைத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. (இவ்வழக்கின் 1 வது எதிரி கடந்த 04/12/2021 அன்று இறந்து விட்டதால் அவரைப் பொறுத்து மட்டும் வழக்கு 28/07/2025 ம் தேதியன்று அற்றுப்போய்விட்டதாக உத்தரவிடப்பட்டுள்ளது.)

4. அரசுத்தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 சுப்பிரமணியன் தனது சாட்சியத்தில் தான் தற்போது அதங்குடியில் வசித்து வருகிறேன் என்றும் ஆஜர் எதிரிகளையும் 8 ம் எதிரி செல்லமுத்துவையும் தெரியும் என்றும் கடந்த 2015 ம் ஆண்டு எதிரிகள் ஊரில் சுமார் 20 ஏக்கரில் விவசாயம் செய்து அனுபவம் செய்து வந்தேன் என்றும் அப்போது தண்ணீர் பாய்ச்சலின்போது பிரச்சனைகள் ஏற்படும் என்றும் அதன்பிறகு வெளியூரில் இருந்து வந்து நீங்கள் ஏன் விவசாயம் செய்கிறீர்கள் எங்களிடம் கொடுங்கள் நாங்களே விவசாயம் செய்கிறோம் என்று இறந்துபோன 1ம் எதிரி கேட்டார் என்றும் அதை நான் ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டேன் என்றும் அதன்பிறகு தான் விவசாயம் செய்து வந்தேன் என்றும் 2015 ம் ஆண்டு பிப்பரவரி மாதம் நாச்சியப்பன் என்பவரை காவலுக்கு போட்டு நான் விவசாயம் செய்து வந்தேன் என்றும் அந்த சமயம் இரவு 8.00 மணிக்கு கதிர் அறுக்கும் மிஷினை வைத்து ஊர் ஆட்கள் சேர்ந்து கதிரை அறுத்துவிட்டார்கள் என்றும் அப்போது இருட்டாக இருந்ததால் அதில் எதிரிகள் இருந்தார்களா என்று எனக்கு தெரியவில்லை என்றும் தான் போகும்போது என்னுடைய இடத்தில் 10 ஏக்கர் அளவிற்கு கதிரை அறுத்துவிட்டார்கள் மீதி 10 ஏக்கரில் கதிர் இருந்தது என்றும் பின்பு போலீசாரிடம் புகார் கொடுத்தேன் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் தான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் (மேற்படி புகார் அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா. 2 சண்முகவேல் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரிகளான சார்பு ஆய்வாளர் திரு. சக்திவேல் மற்றும் திரு. சகாய புஸ்பராஜ் புலன்விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்து முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ.2 ஆகவும், மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் தாக்கல் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் 2 முதல் 8 வரையிலான எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 351(1)(b) இன் கீழ் வினவ 2 முதல் 8 வரையிலான எதிரிகள் சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார்கள். மேலும் 2 முதல் 8 வரையிலான எதிரிகள் தமது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் 2 முதல் 8 வரையிலான எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவம் குறித்து அரசு தரப்பு வழக்கை வலியுறுத்தும் விதமாக சாட்சியம்

அளித்துள்ளபோதிலும் இருட்டாக இருந்ததால் சம்பவ சமயத்தில் எதிரிகள் இருந்தார்களா என்று தெரியவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் அவருடைய 15/07/2026 ம் தேதியிட்ட குறுக்கு விசாரணை சாட்சியத்தில் இரவு 8.00 மணிக்கு மேல் சம்பவம் நடந்ததால் யார் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று தெரியாது என்றும் ஊர் ஆட்கள் நிறைய பேர் நின்றதால் அனுமானத்தின் பேரில் புகார் கொடுத்தேன் என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று தன்னால் உறுதிபடுத்த முடியவில்லை என்றும் இரவில் நடந்ததால் அனுமானத்தின் பேரில் கொடுத்தேன் என்றும் தான் எதிரிகள் பக்கத்து ஊர் என்பதால் அவர்களுடன் சமாதானம் ஆகிவிட்டேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.1 ன் சாட்சியம் எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று எதிரிகளை குற்றப்படுத்தும் விதமாக அமையவில்லை.

(8.2) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 ன்றே எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை வலியுறுத்தி சாட்சியம் அளிக்காமல் சாட்சியம் அளித்துள்ள நிலையில் அரசு தரப்பு வழக்கை வலியுறுத்தும் விதமாக வேறு எந்த சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. அ.சா.2 சார்பு ஆய்வாளர் ஒரு காவல்துறை சாட்சியாக இருப்பதால் அவருடைய சாட்சியத்தை மட்டுமே கொண்டு எதிரிகளை தண்டிப்பது என்பது இயற்கை நீதிக்கு முரணானதாகும்.

(8.3) எதிரிகள் மீது சாட்டப்படும் ஒவ்வொரு குற்றச்சாட்டும் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவேண்டும். இவ்வழக்கின் புகார்தாரரான

அ.சா.1 ன்றே எதிரிகளை குற்றப்படுத்தும் விதமாக சாட்சியம் அளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளதே அரசு தரப்பால் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க இயலாததற்கான காரணமாகும். எனவே எதிரிகள் சந்தேகத்தின் பலனை பெற தகுதி உடையவர்கள் ஆகிறார்கள். எனவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**9) முடிவாக, 2 முதல் 8 வரையிலான எதிரிகள் இதச பிரிவுகள் 147, 448, 379-ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. 1ம் எதிரியை பொறுத்து வழக்கு அற்றுப்போனதாக 28/07/2025 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 24-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.07.24 18:29:00 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

| S.No | Witness of the Prosecution | How | Description of the Witness |
| --- | --- | --- | --- |

| | | | |
|---|---|---|---|
| | | examined | |
| 1. | சுப்பிரமணியன் | அ.சா.1 | புகார்தாரர் |
| 2. | சண்முகவேல் (சார்பு ஆய்வாளர்) | அ.சா.2 | தற்போதைய விசாரணை அதிகாரி |

**Judicial Form No. 68**

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| S.No | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் | 10/07/2025 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | முதல் தகவல் அறிக்கை | 15/07/2026 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |
| 3. | மாதிரி வரைபடம் | 15/07/2026 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | பார்வை மகஜர் | 15/07/2026 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | 15/07/2026 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரிகள் தரப்பு சாட்சி,சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.07.24 18:29:07 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**பின்குறிப்பு:-**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.

2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3.விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.